**GCE 'O' LEVEL TAMIL REVISION EXAM WORKSHEETS (PAPER 2)**

**(GCE 'O' LEVEL தமிழ்ப் பயிற்சித் தேர்வுத்தாள்கள்)**


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 9 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 10 - 18 |
| 3 | தேர்வுத்தாள் 3 (CA1) | 19 - 27 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 28 - 36 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 37 - 45 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 46 - 54 |
| 7 | தேர்வுத்தாள் 7 (SA1) | 55 - 63 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 64 - 72 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 73 - 81 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 82 - 90 |
| 11 | தேர்வுத்தாள் 11 (PRELIM 1) | 90 - 99 |
| 12 | தேர்வுத்தாள் 12 (PRELIM 2) | 100 - 108 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 109 - 120 |
| 14 | விடைத்தாள்கள் | 121 - 144 |


**COPYRIGHTS OF WORDSMITH EDUCATION GROUP/ NOT FOR ILLEGAL REPPRODUCE, COPYING AND CIRCULATION**

## தேர்வுத்தாள் 1

## (some lines are replaced with dotted lines to protect the copyrights)

**'அ' பிரிவு**

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

Q1 தேடிவரும் வேலைவாய்ப்புகளை ________________________ மனமில்லாத தியாகு, தன் படிப்பிற்கு நிகரில்லாத பணியென்றபோதிலும் அதில் சேர்ந்துகொண்டான்.

Q2 இன்றைய பெற்றோர்கள் பிள்ளைகளின் இணைய உரையாடல்களில் ____________________ அவர்களைக் கண்காணிப்பது இன்றியமையாததாகும்.

Q3 ____________________________ சேர்ப்பது வசதியான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் என்றாலும், அவற்றைக் குறுக்குவழிகளில் ஈட்டக்கூடாது.

Q4 தன் முட்டாள்தனத்தால் பெரும் பிரச்சினையில் மாட்டிக்கொண்ட வேணு, அதிலிருந்து எப்படி ________________________ என்று சிந்தித்தான்.

Q5 மாறனின் திருமணம் சுற்றம்சூழ ________________________ நடந்தேறியது.

| | |
|---|---|
| (1) சொத்து சுகம் | (2) எடுத்தெறிந்து |
| (3) பேரும் புகழும் | (4) ஒத்துப்பாடி |
| (5) தலையிட்டு | (6) சீரும் சிறப்புமாக |
| (7) கம்பிநீட்டுவது | (8) கரையேறுவது |
| (9) உற்றார் உறவினருடன் | (10) தட்டிக்கழிக்க |

**A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் வாக்கியங்களை பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக்காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்தைய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.**

Q6 பட்டதாரிகள் சிலரின் மனப்போக்கால் அவர்களின் திருமண வாழ்க்கை தள்ளிப்போகிறது.

பட்டதாரிகள் சிலரின் மனப்போக்கு ______________________________

______________________________

Q7 தமிழ்ப்புலமை வாய்ந்த புலவர்கள் மன்னர்களைப் போற்றிப் பாடிப் பரிசுகள் பெற்றார்கள்.

மன்னர்களைப் போற்றிப் பாடிப் பரிசுகள் பெற்ற புலவர்கள் ______________________________

______________________________

Q8 தமிழ்முரசு செய்தித்தாள் சிங்கப்பூரில் தமிழ்மொழியின் பயன்பாட்டை உயர்த்துகிறது.

தமிழ்முரசு செய்தித்தாளால் ______________________________

______________________________

Q9 உலகத்தில் நடக்கும் போரும் பூசலும் மக்களின் நிம்மதியான வாழ்க்கையைப் பறித்துவிட்டன.

மக்களின் நிம்மதியான வாழ்க்கை பறிபோக ______________________________

______________________________

Q10 இம்மண்ணுலகில் மனிதநேயம் இருப்பதால்தான் ஆதரவற்ற குழந்தைகளுக்கும் நல்ல வாழ்க்கை கிடைத்திருக்கிறது.

இம்மண்ணுலகில் மனிதநேயம் இல்லாவிடில் ______________________________

______________________________

**A3 அமைப்புச் சொற்கள் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப்பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

பணம் ஈட்டுவது வாழ்க்கைக்கு அத்தியாவசியம் தான். ஆனால் பணமே வாழ்க்கை ஆகிவிடாது. உலகத்தில் பணத்தைவிட விலைமதிப்பற்றவை (Q11) ____________________ இருக்கின்றன. அதில் தலையாயது அன்பு. அன்பை நாம் விலைகொடுத்து வாங்க இயலாது. அது விற்பனைக்கும் கிடைக்காது. அன்பினை உணரத்தான் முடியுமே (Q12) ____________________ அதைப் பார்க்க

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

கொடுத்து மகிழ்ச்சியில் திக்குமுக்காட வைப்பார்கள். இவை யாவும் அன்பின் (Q13) ____________________! அன்பு கண்டிப்பின் மூலமும் பிரதிபலிக்கும். பெற்ற பிள்ளைகள் தவறான வழியில் சென்றுவிடுவார்களோ என்ற பயத்தில் பெற்றோர்கள் பிள்ளைகளைக் கண்டிப்பதுண்டு. மாணவர்களின் (Q14) ____________________ கொண்ட அக்கறையால் ஆசிரியர்கள் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதுண்டு. நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பான வசிப்பிடத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற கடமையுணர்வால் அரசாங்கம் பல கடுமையான சட்டதிட்டங்களை (Q15) ____________________. ‘கோபம் உள்ள இடத்தில்தான் குணமிருக்கும்’ என்பது ஆன்றோர்

……………………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………

| | | | |
|---|---|---|---|
| (1) | விதித்துள்ளது | (2) | வளர்ச்சியில் |
| (3) | அதிகம் | (4) | ஒழிய |
| (5) | கல்விமேல் | (6) | போட்டுள்ளது |
| (7) | ஆனால் | (8) | எவ்வளவோ |
| (9) | அடையாளங்களே | (10) | வெளிப்பாடுகளே |

## ‘ஆ’ பிரிவு

**B4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக. வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எழுதுக.**

<u>பகுதி 1</u>




சிறுகதை என்பது நம் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களின் ஆழமான பார்வையே ஆகும். பொதுவாக மற்றவர்கள் காணத் தவறும் ஒன்றைச் சிறுகதை எழுத்தாளன் கண்டு, அனுபவித்து அதை உணர்ந்து எழுதுகிறான்.

சிறுகதை என்பது பொதுவாக அளவில் சிறியதாக இருந்தாலும் அது வாசகர்கள் மனத்தில் ஓர் உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். எழுதிமுடித்த கதைக்கு இருக்கும் எழுதாத முன் கதையையும் பின்கதையையும் வாசகன் உணர்ந்து அதனை அவன்

……………………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………..

சிறுகதைக்குப் பெரும் சம்பவங்களோ, தொடர் நிகழ்ச்சிகளோ தேவையில்லை. நம் வாழ்க்கையின் ஒரே ஒரு கோணமும் அதன் மூலம் வெளிப்படும் ஒரே ஓர் உணர்ச்சியும் அதற்குப்

……………………………………………………………………………………………………………

………………………………………………………………………..

Q16 ஒரு சிறுகதை எப்போது வெற்றியடைகிறது?

1. எழுதி முடிக்கப்படும்போது
2. ஆழமாகப் படிக்கப்படும்போது
3. விரைவாகப் படிக்கப்படும்போது
4. அளவில் சிறியதாக இருக்கும்போது ( )

**COPYRIGHTS OF WORDSMITH EDUCATION GROUP/ NOT FOR ILLEGAL REPPRODUCE, COPYING AND CIRCULATION**

Q17 சிறுகதை எழுதுவதற்கு எது அடிப்படையாக அமைகிறது?

1. ஓர் உணர்ச்சி
2. கற்பனை
3. பெரும் சம்பவங்கள்
4. சிறு துவாரம் ( )

**<u>பகுதி 2</u>**

| |
|---|
| <u>மரபுத்தொடர்</u> |
| குரங்குப்பிடி |
| உதட்டளவு |

நாட்டுப்புற மக்கள் தங்கள் அன்றாடப் பேச்சு வழக்கில் பயன்படுத்தும் சொற்றொடர்களே மரபுத்தொடர்களாயின. இவை ஏட்டில் எழுதப்படாத தொடர்கள் என்றும் கூறலாம். மரபுத்தொடர்கள் தமிழர்களின் பண்பாடுகளைப் பிரதிபலித்தன. அதனாலேயே இவற்றுக்கு இதன் பெயரும் பொருத்தமாய் அமைந்தன.

கிராமத்து மக்கள் உணர்ச்சிவயப்பட்டவர்கள் என்பதால் அவர்கள் பேச்சு வழக்கிலும் அதிகமான உணர்ச்சி கலந்திருக்கும். சொல்ல வந்த செய்தியைப் பொருள் பிறழாது, ஏற்ற ..........................................................................................................................

.........................................................................................................................பதிந்துவிடும். **"**ஐயோ**,** நம்பிய எனக்குத் துரோகம் செய்துவிட்டானே!**"** என்றுரைப்பதைவிட**,** **"**ஐயோ**,** நம்பிய என்னைக் கழுத்தறுத்துவிட்டானே!**"** என்று கூறும்போது பாதிக்கப்பட்டவரின் வலியை நம்மால் உணர முடிகிறது. இதுவே மரபுத்தொடரின் வலிமையாகும். இந்த மொழியழகினைச் சாதாரண நடையில் நாம் வெளிக்கொணர இயலாது.

மரபுத்தொடரின் பொருள் நேரடியாக அல்லாமல் மறைமுகமாகவே இருக்கும். அதைச் சொல்லுக்குச் சொல் அப்படியே பொருள்கொள்ள முடியாது. உதாரணமாக**,** காதுகுத்துதல் என்பது ..........................................................................................................................

காதுகுத்துதல் இந்தியர்களின் மரபு. சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் காதுகுத்தும்போது அவர்களுக்கு வலி தெரியாமலிருக்கப் பெரியவர்கள் பல கதைகளைச் சொல்லி அவர்களை

**COPYRIGHTS OF WORDSMITH EDUCATION GROUP/ NOT FOR ILLEGAL REPPRODUCE, COPYING AND CIRCULATION**

…………………………………………………………………………………………………………….............

..............................................................................................................................................................

Q18 மரபுத்தொடர் என்னும் பெயர் எப்படி ஏற்பட்டது?

1. நாட்டுப்புற மக்கள் பயன்படுத்தியதால்
2. தமிழர்களின் பண்பாடுகளைப் பிரதிபலித்ததால்
3. ஏட்டில் எழுதப்படாததால்
4. அன்றாடப் பேச்சுவழக்கில் பயன்படுத்தப்பட்டதால் ( )

Q19 மரபுத்தொடர்களின் வலிமை யாது?

1. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது
2. அளவில் குறுகியதாக இருப்பது
3. மொழியை அழகுபடுத்துவது
4. செய்தியை ஆழமாகப் பதிப்பது ( )

Q20 ‘காதுகுத்துதல்’ என்னும் மரபுத்தொடர் எவ்வாறு தோன்றியது?

1. நாம் காதணிகளை அணிய காதுகுத்திக்கொண்டதால்
2. குழந்தைகளுக்கு வலி உண்டாகாமல் குத்தியதால்
3. குழந்தைகளை ஏமாற்றிக் காதுகுத்தியதால்
4. மரபுத்தொடரில் பொருள் நேரடியாகக் கூறப்படாததால் ( )

**‘இ’ பிரிவு**

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.**



நட்பு என்பது பதின்ம வயதினரிடையே இன்றியமையாத ஒன்றாக உருவெடுத்து வேரூன்றியும் விட்டது. குடும்பப் பந்தத்தைப் போலவே நட்பும் அவர்களின் வாழ்வில் ஒரு பிரிக்க முடியாத உறவாகிவிட்டது. அதைவிட, நட்பே சில சமயங்களில் அவர்களுக்கு இரத்த உறவுகளைவிட வலிமை மிக்கதாகவும் விளங்குகிறது. இதற்கு முக்கியக் காரணம், அவர்கள் வாழும் சூழலே ஆகும். தவிர்க்க முடியாத நிலைகளில் பெற்றோர்கள் பிள்ளைகளைவிட்டு அதிக நேரம் பிரிந்திருப்பது நண்பர்கள் தங்கள் **ஆதிக்கத்தை**ச் செலுத்த இடங்கொடுத்துவிட்டது.

நண்பர்கள் என்றுரைக்கும்போது அவர்கள் எல்லாரும் தீயவர்கள்தாம், தங்கள் பிள்ளைகளைக் கெட்ட வழிகளில் இட்டுச்செல்லக் கூடியவர்கள்தாம் என்று பெற்றோர்கள் உடனே ……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………..

இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் நண்பர்களின் **நடத்தையில்** அதிகம் அக்கறை கொண்டவர்கள். சுயநலம் கருதாது தம் சிநேகிதனின் நல்வாழ்வு ஒன்றிற்காகவே பாடுபடுபவர்கள். தோழமைக்கு என்றுமே தோள்கொடுக்கும் இவர்கள், தங்கள் நண்பனுக்கு ஒன்றென்றால் உயிரையும் கொடுக்கும் தன்மை வாய்ந்தவர்கள்.

ரோஜாச் செடியில் ஆங்காங்கே முட்கள் இருப்பது போன்று நல்ல நண்பர்கள் மத்தியில் கேடு நினைக்கும் தீயவர்களும் இருக்கவே செய்கிறார்கள். இவர்கள் முகமலர்ந்து மட்டுமே நட்புறவாடுவார்கள்; தங்கள் நலத்தைப் பற்றி மட்டுமே எண்ணுவார்கள். இவர்களின் தீய உள்ளம் அறிந்து **அரும்பிலேயே** இவர்களின் உறவை அறுத்துவிடுவது நலம்பயக்கும். தோலின்மீது இருக்கும் புண் சிறியதாகவிருக்கும்போதே அதற்குச் சிகிச்சை அளிப்பது அறிவுடைமை. இல்லையேல், அது சீழ் வைத்து, உடலை ஊடுருவி நம் ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடும்.

**COPYRIGHTS OF WORDSMITH EDUCATION GROUP/ NOT FOR ILLEGAL REPPRODUCE, COPYING AND CIRCULATION**

‘உன் நண்பர்கள் யாரென்று சொல், நீ யாரென்று கூறுகிறேன்’ என்கிறது அயல்நாட்டுப் பழமொழியொன்று. நாம் யாருடனாவது நெருக்கமாகப் பழகினால் இயற்கையாகவே அவர்களின் …………………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………………
பண்புகளும் பழக்கங்களும் நம்மைச் சேர்ந்தால் அது நமக்கும் உயர்வைத் தரும். ஆனால், நேர்மாறாக நடந்துவிட்டால் அது நம் வாழ்க்கையையே **சீரழித்துவிடும்**.

பதின்ம வயதினருக்கு நல்லவற்றையும் தீயவற்றையும் **பகுத்து**ப் பார்க்கும் ஆற்றல் …………………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………………..
நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களுக்குச் சுலபமாக நல்வழிகாட்ட முடியும்.

**வினாக்கள் (25 மதிப்பெண்கள்)**

Q21 பதின்ம வயதினர் நட்பை எவ்வாறு காண்கிறார்கள்? (4 மதிப்பெண்கள்)

Q22 நல்ல நட்பு எப்படிப்பட்டது என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்? (5 மதிப்பெண்கள்)

COPYRIGHTS OF WORDSMITH EDUCATION GROUP/ NOT FOR ILLEGAL REPPRODUCE, COPYING AND CIRCULATION

Q23 தீய நட்பு தோலின்மீது இருக்கும் புண்ணுக்கு ஒப்பிடப்படுவது ஏன்? (5 மதிப்பெண்கள்)

Q24 'உன் நண்பர்கள் யாரென்று சொல், நீ யாரென்று கூறுகிறேன்' என்னும் பழமொழி உணர்த்தும் பொருள் யாது? (5 மதிப்பெண்கள்)

Q25 தங்கள் பதின்ம வயதுப் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் எப்போது நல்வழிகாட்ட இயலும்? (6 மதிப்பெண்கள்)

**COPYRIGHTS OF WORDSMITH EDUCATION GROUP/ NOT FOR ILLEGAL REPPRODUCE, COPYING AND CIRCULATION**

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை எழுதுக. (5 மதிப்பெண்கள்)**

Q26 ஆதிக்கத்தை - ______________________________

Q27 நடத்தையில் - ______________________________

Q28 அரும்பிலேயே - ______________________________

Q29 சீரழித்து - ______________________________

Q30 பகுத்து - ______________________________

**COPYRIGHTS OF WORDSMITH EDUCATION GROUP/ NOT FOR ILLEGAL REPPRODUCE, COPYING AND CIRCULATION**